## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.தே.விஜயகுமார், (தா/பெ. திருமதி ஆர்.மல்லிபுஷ்பம்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை

அரசாணை (2ப) எண்.186

நாள் : 29.11.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, கார்த்திகை – 13

படிக்க :-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.எண்.41343/நியி8/1/2017, நாள். 30.07.2019.

-----

**ஆணை :-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடிதத்தில், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்த திருமதி ஆர். மல்லிபுஷ்பம் என்பவர் மருத்துவ இயலாமை காரணமாக 24.09.2001 அன்று ஓய்வில் சென்றுள்ளார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 18.09.1949 என்றும். அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.09.2009 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மகன், திரு.தே.விஜயகுமார் என்பவர் தனக்குப் பணிநியமனம் வேண்டி 26.08.2003 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 14.01.1980 என்றும், திரு.தே.விஜயகுமார் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி இளநிலை உதவியாளராக 24.05.2018 முற்பகல் பணியில் சேர்த்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 24.05.2018 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திரு.தே.விஜயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 24.05.2018 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன் முறை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

REDMI NOTE 5 PRO
MI DUAL CAMERA